தூத்துக்குடி மாவட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை மூலம் ஏரல் அரசு சமுதாய நல மையத்தில் நடைபெற்ற விழாவில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 12 புதிய சுகாதார கட்டிடங்களை திறந்து வைக்கும் விதமாக அதற்கான கல்வெட்டினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி நேற்று (05.03.2025) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி.செ.அமிர்தராஜ், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மேயர் பெ.ஜெகன் ஆகியோர் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.கமல் தலைமை!

மக்கள் முதல்வரின் மனிதநேயம் 13 - பொதுவாழ்வில் நேர்மையானவர்! அம்பத்தூரில் புகழரங்கம்!

அ.அருள்மொழி – வே.மதிமாறன் – இந்திரகுமார் தேரடி – முனைவர் மஞ்சுளா சிறப்புரை!

சென்னை, மார்ச் 6- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 13, பொது வாழ்வில் நேர்மையானவர்! புதுவாழ்வின் விடியலானவர்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் வடக்கு பகுதி பகுதியில் மாபெரும் புகழரங்கம் நேற்று (05.03.2025 - புதன்) மாலை 6 மணியளவில், சென்னை, அம்பத்தூர் எஸ்டேட் பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் 86வது வட்ட கழக செயலாளர் எம்.கமல் எம்.சி, தலைமை வகித்தார். மாவட்ட க்கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, து.ஆயிரம், கு.கிருஷ்ண மூர்த்தி, ஜெ.பாலமுருகன், பி.வி.மூர்த்தி, கோ.சேகர்லால், ஆர்.செல்வம், வி.பி.ரவிவந்திரன் வி.ராமு, மரியகலைச்செல்வன், அன்புவேலுச்சாமி, டாக்டர்.ஜெய்லான்ஸ், எம்.வி.தமிழ்செல்வன், பி.பாலாஜி முன்னிலையில் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதி மொழியை ஏற்று திராவிடர் கழக பிரச்சார குழு செயலாளர் வழக்கறிஞர் அ. அருள்மொழி, பெரியார் எழுத்தாளர் வே.மதிமாறன், ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, முனைவர் மஞ்சுளா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

எஸ்.சாலமன், எஸ்.ஞானசேகர், எஸ்.வினோத்குமார், ஜெ.மாலதி, எ.ஆதம், கே.ரவிச்சந்திரன், பா.பொன்னுரங்கம், டி.சங்கர், து.பார்த்தசாரதி, வி.மைக்கல் ஜெபராஜ், ஜெஸ்டின் பிரபு, டி.முகேஷ், ஜா.டைட்சன், ஜி. பிரதாப், ர.சந்தானகிருஷ்ணன், கே.கிருஷ்ணகுமார், எம்.டி.மோனிஷா, எஸ்.கோபிநாத் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சன்.முனியாண்டி. கோ.ஏகப்பன், எம்.சாமிகண்ணு, சுதாதீனதயாளன் ராஜேஸ்வரிஸ்ரீதர் அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: க.பொற்கொடி, எம்.இ.சேகர், எஸ்.உமா , உஷாநாகராஜ் , அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா, செல்லதுரை, கு.சங்கர், து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமிரங்கசாமி, மேனாம்பேடுஇ.ராமு. அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: த.கண்ணபிரான், பு.வீரா, மு.இரகு, வெ.ராதாகிருஷ்ணன், த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், மாவட்ட பிரதிநிதிகள்: பொன்.நவராஜ் ரவி, எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா.அருண், க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.முருகானந்தம், பொ.சேதுராமன்(எ) பொன்சேட்டு, ஏ.கே.டி.பாஸ்கர், ஆர்.ஜெயராமன், சோ.மதியழகன், எஸ்.எஸ்.சவரி முத்து, பா.மாறன், டி.சுரேஷ்பாபு, எஸ்.கே. சதீஷ்குமார், ஏ.வி.தட்சிணாமூர்த்தி, கே.செல்வம், கோ.முத்துகுமாரசாமி, கோ. ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம்.

மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள்: பக்கீர் மொய்தீன், டாக்டர்.வி.சுதர்சன், ஆர்.எம்.இளங்கோ, எஸ்.சிவசண்முகம், ஆ.பிரகாஷ், ச.கோவிந்த், இரா.பாலசுந்தர், கு.வேணுகோபால், துரைகணேஷ், கே.பிரகாசம், ரா.மகேஷ்வரி, ஸ்னோபகிருஷ்ணமூர்த்தி, ஆசைஆரோக்கியம், தில்மகேஷ், அசோக் ஆண்ரூஸ், என்.மோகன், அண்ணாதுரை டாக்டர். பூபாலன், சா.ஜெகநாதன், டி.ஸ்ரீதரன், வி.இராமு, இரா.பாலமுருகன், எம்.இ.எஸ். சந்தோஷ்குமார், மு.க.அரியாஸ்முகமது, யு.இலக்கியா, எஸ்.ஜெயபாலன், பி.பாலாஜி, என்.மோகன், கே.அன்பரசு,

என்.ஸ்ரீதரன், ஆர்.பிரேம்குமார், எஸ்.பிரவீன்குமார், ஆ.நாதன், வி.மகேஷ்பாபு, பி.ஜெயபிரகாஷ், ஏ.என்.ஆர்.செந்தில்குமார், எஸ்.அன்புச்செல்வன், எஸ்.பாண்டியன், ஜி.மெல்வின் ஜோதி, எம்.எஸ்.ரமேஷ், கே.எஸ்.வரதராஜன், சி.லதா, ஏ.கே.பி.கிருஷ்ணன், வி.மில்லன், சா.மோகன்ராஜ், க.சத்தியநாராயணன், எம்.இ.சந்தீப், எல்.ஜெய்லான்ஸ், சுந்த ர்ராஜன், கே.மகேஷ், கே.எம்.ஷாம்சுந்தர், டி.பாலமுருகன், ஆர்.ஜானகிராமன், ஆர்.ஜெயபிரகாஷ், எ.விஜய் எஸ்.விஜயகுமார், ஏ.அன்சார், அம்புரோஸ் டாக்டர். வி.ஜி.சந்தோஷ், விஜய் அமர்நாத் த.சுரேஷ் குமார் அ.செல்வராஜ் கோ.சங்கரி. வி.வசந்தி மல்லிகா ஆகியோர் சிறப்பித்தனர்.

பகுதி பிரதிநிதிகள் டி.சங்கர், து.பார்த்தசாரதி நன்றி கூறினார்கள்.

மீண்டும் சென்னை - லண்டன் நேரடி விமானச் சேவையைத் துவக்கிடுக!

ஒன்றிய விமானத்துறை அமைச்சருக்கு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி கடிதம்!

சென்னை, மார்ச்.6- வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஒன்றிய விமானத்துறை அமைச்சர் கிஞ்சாப்பு இராம் மோகன் நாயுடு அவர்களுக்கு, சென்னை லண்டன் நேரடி விமான சேவையை உடனடியாகத் துவக்க தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

கடந்த 10.02.2025 அன்று, லண்டனில் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் உயர்திரு. சர் ஸ்டீபன் டிம்ஸ் என்னும் உறுப்பினர், கோவிட்19 பாதிப்பு ஏற்பட்டபோது நிறுத்தப்பட்ட லண்டன் சென்னை நேரடி விமான சேவையை மீண்டும் துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அவருடைய கருத்தை வரவேற்று, நானும் தங்களிடம் சென்னை லண்டன் நேரடி விமானச் சேவையைத் தொடங்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஹைதராபாத், பெங்களூரு மற்றும் கொச்சி போன்ற இந்திய நகரங்களுக்கு, லண்டன் நகரத்தில் நேரடி விமான சேவைகள் உள்ளன. லண்டனில் வாழும் 3 லட்சத்திற்கும் மேலான தமிழர்களின் அமைப்பு (பெடரேஷன்), லண்டன் சென்னைக்கு நேரடி விமான சேவையை வழங்க வற்புறுத்தி வருகின்றது. கோவிட்19 பெருந்தொற்று பாதிப்புக்கு முன்பு சென்னை லண்டன் நேரடி விமான சேவை இருந்து வந்துள்ளது. கோவிட்19 பாதிப்பின் போது நிறுத்தப்பட்ட இந்த விமான சேவை மீண்டும் துவங்கப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

சென்னை மாநகரம், லண்டன் நகருடன் கலை, பண்பாட்டு வழியிலும், முக்கிய வியாபார தளமாகவும் இணைந்துள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இலட்சக்கணக்கான தமிழர்கள் அங்கு பணி நிமித்தமாகவும், மேல்கல்வி பயில்வதற்காகவும் இங்கிலாந்து நாட்டிற்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், மீண்டும் நேரடி சேவையைத் தொடங்கினால், அது நேரடி வர்த்தகத்தை மேலும் ஊக்கப்படுத்தி வளர்ச்சி பெறச் செய்யும். அங்கு வாழும் தமிழர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

எனவே மேற்காணும் காரணங்களினால், சென்னை லண்டன் நேரடி விமான சேவையை உடனடியாகத் துவக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (05.03.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, ராயபுரம் மண்டலம், வால்டாக்ஸ் சாலை, அம்மன் கோவில் தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் மூலதன நிதி ரூ.242.88 இலட்சம் மதிப்பில் புதிய பள்ளி கட்டடம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, ராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமித்ஷாவின் அர்த்தமற்ற ஆணவப் பேச்சு!

தமிழ்நாடு அமைச்சர்கள் பா.ஜ.க செய்யும் ஆணவச் செயல்களை கண்டித்து கருத்துச் சொன்னால் அண்ணாமலை ஆவேசமாக அமைச்சர்கள் இப்படி கண்ணியக்குறைவாக பேசலாமா எனவே நானும் பேசுகிறேன் என்று ஒருமையில் பேசி வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அவரது காற்றில் போகிற கசப்பான கண்ணியக் குறைவான வார்த்தைகளால் எங்களுக்கு காயமும் ஏற்படப்போவதில்லை கவலை கொள்ள வைக்கப் போவதுமில்லை. அரசியலில் அடி உதை பட்டு யாருக்கும் அஞ்சிடாமல் வீரத் தோள்கள் விம்மி எழப் பவனி வருபவர்கள் தான் நாங்கள்.

அண்ணாமலைக்கு அரசியல் அறியாத பாடம். தினம் தினம் செய்தியாளர்களைப் பார்த்து சவால் விட்டால் சண்டியரைப் போல் பேசினால் போதாது. ஒரு பத்திரிக்கையாளர் (புதிய தலைமுறை) கேட்டக் கேள்விக்கு அங்கேயே பதில் சொல்ல முடியாமல் அறைக்குள் வாருங்கள் பதில் தருகிறேன் என்று கோவப்பட்டு பேசிய விதத்தை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர்.

ஒரு பத்திரிக்கையாளரை கூட கையாளத் தெரியவில்லை. சவால் விடுவதற்கு மட்டும் குறைச்சலில்லை. இந்தித் திணிக்கப் போவதை கண்டித்து முதன் முதலில் தீக்குளித்து மாண்டானே கீழப்பழூவூர் சின்னச்சாமி அவன் கண்ணெதிரே மனைவி கமலாவும் மகள் திராவிடச் செல்வி தாயின் இடுப்பில் இருக்க இந்தி ஒழிக தமிழ் வாழ்க என்று முழக்கமிட்டவன் தான் அந்த தியாக மறவன். அவருக்கு பின் பலர்.

இந்த வரலாறெல்லாம் அண்ணாமலைக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. அப்போது அவர் பிறந்திருக்கவே மாட்டார். நான் சென்ஸ் என்று தமிழர்களைப் பார்த்து கூறிவிட்டு ஜவஹர்லால் நேரு பட்டபாடு அண்ணாமலைக்கு தெரியாது. முதலில் திராவிட இயக்க வரலாற்றை ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பாருங்கள். நேருவுக்கு அண்ணா அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா? பெரிய மனிதர் நாவில் சின்ன வார்த்தைகள் என்பதாகும். எவ்வளவு நாகரிகம் பார்த்தீரா! அப்படிப்பட்ட அறிஞர் அண்ணாவால் வளர்க்கப் பட்டவர்கள் திராவிட இயக்கத்தினர்.

இது போன்று பல சம்பவங்கள் எழுதிக் கொண்டே போகலாம். அவைகளை எழுதினால் உண்மையிலேயே மனம் இருந்தால் அண்ணாமலை பா.ஜ.கவில் இருந்து விலகிய தமிழன் என்ற பெயரைப் பெறுவார். அறிஞர் அண்ணாவைப் போல் ஒரு தலைவரை பா.ஜ.கவில் அண்ணாமலை கூறுவாரா? தந்தை பெரியார் அஞ்சாத சிங்கம். முதல் திருத்தம் அரசியல் சட்டத்தில் ஏற்பட காரணமானவர். தனது 95 வயதில் தி.நகர் கடைசி கூட்டத்திலும் தனித் தமிழ்நாடு கேட்ட தமிழ் வேங்கை. அவரைப் போல் ஒரு துணிச்சல்காரரை பா.ஜ.க.வில் கூற முடியுமா?

வி.பி.கலைராஜன்
கழக இலக்கிய அணிச் செயலாளர்

அமித்ஷா இந்தியாவின் உள்துறை அமைச்சர், அதற்குரிய மரியாதையை நாம் தருகிறோம். ஆனால் பேசிய பேச்சு மரியாதைக் குரிய பேச்சா? தமிழ்நாட்டில் ஊழல் அதிகரித்து விட்டதாம். தேசவிரோத சக்திகள் வேரோடு பிடுங்கி எறியப்படுமாம். சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் சீர்கெட்டு விட்டதாம்.

ஒன்றிய அமைச்சர் பா.ஜ.கவின் முக்கிய தலைவர் பேசியுள்ள பேச்சைப் பார்த்தீரா? எவ்வளவு பொறுப்பற்றத்தனம்? ஊழல் அதிகரித்து விட்டதாம். எந்த ஊழல் என்று ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு சொல்ல முடிந்ததா? தேசவிரோத சக்திகளாம்! யார் தேசவிரோதிகள்? ராணுவத்தில் பல்லாயிரக் கணக்கில் உயிரைப் பணயம் வைத்து நிற்கிறானே தமிழன் அந்த தமிழர்கள் தேச விரோதிகளா? கல்வான் பள்ளத்தாக்குதலிலும் தமிழக வீரர்கள் இறந்துள்ளனரே! புல்வாமா தாக்குதலிலும் தமிழக வீரர்கள் இறந்துள்ளனரே! நாங்களா தேச விரோதிகள்?

புல்வாமா தாக்குதல் ஒன்றிய பா.ஜ.க அரசின் அலட்சியத்தால் நிகழ்ந்தது என்று ஆளுநர் சத்தியபால் மாலிக் குற்றம் சுமத்தினாரே! அதை வைத்து நீங்கள் 2019 பாராளுமன்றத் தேர்தலில் வாக்கு அறுவடை செய்ததை மறந்து விட்டீர்களா? உயிர் கொடுக்கத் தமிழர்கள்! ஒன்றிய ஆட்சியில் பா.ஜ.க! சீனாவுடன் நடந்த போரின் போது திராவிட நாடு கோரியதை கைவிட்டவர் அறிஞர் அண்ணா. இந்தியா தான் முக்கியமென்றார். கார்கில் யுத்தத்திற்கு இந்திய அரசிற்கு மற்ற மாநிலங்களை விட அதிக நிதி கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். நாங்களா தேசவிரோதிகள்?

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாம். உள்துறை அமைச்சர் அதிகாரத்தில் உள்ளவர் அவருக்கு சரியான தகவல் உடனே கிடைக்கும். உ.பி.யில் பா.ஜ.க ஆட்சியில் சட்டம் ஒழுங்கு எப்படி உள்ளது? சம்பலில் மசூதியை இடிக்க முயன்று 5 இஸ்லாமிய இளைஞர்களை சுட்டுக் கொன்றது யார்? பட்டியலின மக்கள் அங்கே படும் பாட்டை நாடு அறியாதா? இப்படித் தான் பா.ஜ.க ஆளும் மற்ற மாநிலங்களிலும் நிலவரம் உள்ளது. குஜராத்தில் நாடாறிந்த பில்கிஸ்பானு வழக்கு. குற்றவாளிகளுக்கு மாலை போட்டு வரவேற்றவர் இந்த அமித்ஷாதான். அந்த குற்றவாளிகளை மீண்டும் சிறைக்குள் தள்ளியது உச்சநீதிமன்றம் இதை மறுக்க முடியுமா?

2026ல் தமிழ்நாட்டில் ஆட்சியில் அமரப் போகிறார்களாம். அதற்கு உதாரணமாக 2025ல் டெல்லி சட்டமன்றம் சாட்சியாம்! இது தொடருமாம். 2025 வேறு 2026 வேறு. 2026ல் பா.ஜ.க தற்போது வைத்துள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளையும் இழக்கப் போவது நிச்சயம்.

எட்டு முறை பிரதமர் மோடி அவர்கள் வந்தார் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு சீட் வெல்ல முடிந்ததா? இப்போது அமித்ஷா அவர்கள் சவால் விட்டுள்ளார். இவர் வேண்டுமானால் 16 முறை வரட்டும் பிரச்சாரம் செய்யட்டும். என்ன அறுவடை செய்கிறார் என்பதைப் பார்ப்போம். நெல்லை தி.மு.க அள்ளும், கருக்காய் அதாவது பதரை பா.ஜ.க தான் அள்ளும். இது நடக்கத் தான் போகிறது.

தமிழ்நாட்டிற்கு மறுசீரமைப்பில் ஒரு தொகுதி கூட குறையாதாம்? அமித்ஷா கூறிவிட்டார் போதாதா? என்கிறார் அண்ணாமலை. உ.பி.க்கு, பீகாருக்கு, ம.பி.க்கு எத்தனை இடங்கள் அதிகரிக்கும் என்பதை வெளியிட்டு அதே அளவு தமிழ்நாட்டிற்கும் அதிகரிக்கும் என்று அமித்ஷா அவர்கள் கூறினாரா?

கல்வியில் சிறந்தவர்கள் தமிழர்கள். அதனால் குடும்பக் கட்டுப்பாட்டை சரியாக அமல்படுத்தினார்கள். உண்மையில் அதற்காக ஒன்றிய அரசு ஊக்கப்படுத்த பீகாரை விட கூடுதலாக ஒரு தொகுதியையாவது கூடுதலாக தரவேண்டும். அதை விடுத்து தொகுதி குறையாது என்றால் என்ன அர்த்தம்? அண்ணா கைவிட்ட திராவிட நாடு கோரிக்கையை தென்மாநிலங்களை கேட்க வைத்து விடாதீர்கள்? இந்தி பேசும் மாநிலங்கள் மட்டும் இந்தியா அல்ல!

மூன்றாவது மொழியை ஏற்காவிட்டால் கல்வி நிதி தரமாட்டோம் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதான் கூறியுள்ளார். உடனே அண்ணாமலை அவர் இந்தியை திணிக்க கூறவில்லை. ஏதாவது ஒரு மொழியை பயிலச் சொல்கிறார் என்கிறார்.

இருமொழிக்கொள்கை எங்கள் கொள்கை. சரி வாதத்திற்கு வைத்துக் கொள்வோம் இந்தி இல்லை வேறு மூன்றாவது மொழி எங்களுக்கு எதற்கு? விருப்பப்படுபவர்கள் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். எங்களை ஏன் நிர்பந்திக்கிறீர்கள்?

தமிழ் மொழியை போற்றுகிறாராம் வளர்க்கிறாராம் பிரதமர் மோடி அமித்ஷா அள்ளி விட்டுள்ளார். ஆம் தமிழ் வளர்ச்சிக்கு ரூ.74 கோடி சமஸ்கிருத வளர்ச்சிக்கு ரூ.1,488 கோடி. இதுதான் தமிழ்நாட்டில் 8 கோடி பேர் பேசும் தமிழ் மொழியை பா.ஜ.க வளர்க்கும் இலட்சணமா? சமஸ்கிருதம் எத்தனைப் பேர் படிக்கிறார்கள்?

ஐ.நா.வில் இந்தியை கொண்டுவர ரூ. 500 கோடி ஒதுக்கியுள்ளார். மூத்த மொழி தமிழ் இது நமக்குப் பெருமை என்று யார் சொன்னார்? பிரதமர் மோடி சொன்னார். உலகில் 124 நாடுகளில் தமிழர்கள் வாழ்வதாக கூறப்படுகிறது. கிட்டத்தட்ட 11 கோடி பேர் தமிழ் பேசுகிறார்கள். இலக்கியம் இலக்கணம் ஏராளமாக தமிழில் உள்ளது. எந்த இலக்கியம் இந்தியில் உள்ளது? ஏன் ஐ.நா.வில் உலக மூத்த மொழி தமிழ் இருக்கட்டும் என்று பிரதமர் மோடி நிதி ஒதுக்க வேண்டியது தானே!

மகாத்மா காந்தி ஆங்கிலம் அறிந்தவர் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். அவர் தனது சுயசரிதையை ஆங்கிலத்திலா எழுதினார்? தன் தாய் மொழியிலான குஜராத்தியில் தான் எழுதினார். ரவீந்திரநாத்தாகூர் வசதி படைத்தவர், ஆங்கிலம் நன்கு அறிந்தவர். அவர் தேசியப் பாடலை ஆங்கிலத்தில் எழுதவில்லை, வங்க மொழியில் தான் எழுதினார்.

உலகச் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ் டாஸ் கேப்பிட்டல் அதாவது மூலதனம் எந்த மொழியில் எழுதினார்? தனது ஜெர்மன் மொழியில் தான் எழுதினார். பிறகு தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. அதில் வள்ளுவர் ஒரு இடத்தில் கூட தமிழ் என்றச் சொல்லைப் பயன்படுத்தவில்லை. எந்த மதத்தையும், எந்த மன்னன் பெயரையும், எந்த கடவுள் பெயரையும் குறிப்பிட்டு எழுதவில்லை.

அதனால்தான் அது உலகப் பொதுமறையாக விளங்குகிறது. பைபிள் அதிக மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. குரான் அதற்கடுத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் தான்.

சங்கத் தமிழில் மதம் பற்றி கூறவில்லை, சாதி பற்றிக் கூறவில்லை. அதைத் தான் தந்தை பெரியார் பெண்ணுரிமை காக்கப்பட வேண்டும் மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமென்றார்.

சதி அதாவது உடன்கட்டை ஏறுவதை ஒழித்தவர் ராஜாராம் மோகன்ராய். அவர் தனது வங்க மொழியில் தான் படித்தார் எழுதினார். ஆங்கிலத்தில் எழுதவில்லை ஆனால் அவருக்கு ஏழு மொழி தெரியும். விரும்பியது தன் தாய் மொழி வங்க மொழியைத் தான்.

கருப்பின மக்களுக்காக வாதாடியவர் போராடியவர் மார்ட்டின் லூதர்கிங். “எனக்கு ஒரு கனவு இருக்கிறது” என அவர் உரையாற்றினார். உலக கருப்பினத்தவர்கள் அந்தப் பேச்சால் ஒன்றிணைந்தனர். மனிதர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் சமம் என்பது தான் அதன் சாராம்சம். “ஐ கேவ் எ டீரிம்” என்பது தான் அந்த உரை.

திருட்டுத் தனமாக தான் நினைப்பதை சாதிக்க மாநில உரிமையை பறிக்க முயலும் ஒன்றிய பா.ஜ.க அரசை வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் தமிழர்களை ஒருங்கிணைக்க தந்தை பெரியாராக, அறிஞர் அண்ணாவாக, முத்தமிழறிஞர் கலைஞராக திகழ்ந்து நம்முதல்வர் தளபதி அவர்கள் தமிழுக்கு தீங்கு என்றால் தன் உயிரே போனாலும் பரவாயில்லை. என் எதிர்கால சந்ததியினரை எவ்வகையிலும் காப்பேன் என்று களம் கண்டுள்ளார்.

அமித்ஷா அவர்களின் கதைகளை பொய்யாக்கி காட்டுவார் எம்முதல்வர். போராடி பெறுவதே வீரம்! போராடி வெல்பவர் நம்முதல்வர்!